# 12

# கானானில் ஆபிரகாம்!

## (Patriarchs and Prophets, pp. 132–144)

### (ஆதியாகமம் 13–15; 17:1–16; 18)

ஆபிரகாம் "மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாக" கானானுக்குத் திரும்பினான். லோத்து இன்னும் அவனோடு இருந்தான். மீண்டும் அவர்கள் பெத்தேலுக்கு வந்து, தாங்கள் முன்பு கட்டியிருந்த பலிபீடத்தண்டையில் தங்களது கூடாரங்களைப்போட்டார்கள். அதிகமாக அதிகரித்த சொத்துக்களால் பிரச்சனைகள் அதிகரித்ததை அவர்கள் விரைவில் கண்டார்கள். கஷ்டங்கள் சோதனைகளுக்கு மத்தியில் அவர்கள் இணக்கத்தோடு ஒன்றாக குடியிருந்தார்கள். ஆனால் செழிப்பில் அவர்களுக்கிடையே சண்டை வரும் அபாயம் இருந்தது. இருவருடைய மந்தைகளுக்கும் மேய்ச்சல் நிலம் போதுமானதாக இல்லை. மேய்ப்பர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதங்கள் அவர்களுடைய தலைவர்களை ஒரு தீர்மானத்திற்குக் கொண்டுவந்தது. அவர்கள் பிரியவேவேண்டும் என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆபிரகாம் லோத்தைவிட வயதில் பெரியவனாயிருந்து, உறவிலும் ஐசுவரியத்திலும் தகுதியிலும் மேலானவனாயிருந்தான். என்றாலும் சமாதானத்தை பாதுகாக்க அவனே முதலாவது பேசவேண்டியதாயிற்று. முழு தேசமும் தேவனால்தாமே அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தபோதும், அவன் மரியாதையோடு இந்த உரிமையை விட்டுக்கொடுத்தான். (1)

"ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னை விட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம்போனால், நான் வலதுபுறம் போகிறேன். நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான்." (2)

இங்கே ஆபிரகாமின் நேர்மையான சுயநலமற்ற ஆவி வெளிக்காட்டப்பட்டது. எத்தனைபேர் இதேபோன்ற சூழ்நிலைகளில்

தங்களுடைய தனிப்பட்ட உரிமைகளையும் முன்னுரிமைகளையும் அனைத்து ஆபத்துகளுடனும் பிடித்துக்கொண்டிருப்பார்கள்! எத்தனை குடும்பங்கள் பிரிந்து உடைந்துபோயிருக்கின்றன! எத்தனை சபைகள் சத்தியத்தை துன்மார்க்கருக்கு நடுவிலே நிந்தையாக்கி, பிரிந்துபோயிருக்கின்றன! “என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர்” என்றான் ஆபிரகாம். இயற்கையான உறவினிமித்தம் மாத்திரமல்ல, மெய்யான தெய்வத்தை வணங்கினதினாலே அவர்கள் சகோதரராயிருந்தார்கள். உலகமுழுவதிலும் இருக்கிற தேவனுடைய பிள்ளைகள் ஒரு குடும்பத்தார். ஒரேவிதமான அன்பின் ஆவியும் சமாதானத்தின் ஆவியும் அவர்களை ஆட்சிசெய்யவேண்டும். “சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக் கொருவர் முந்திக்கொள்ளுங்கள்” (ரோமர் 12:10) என்பதுவே நமது இரட்சகரின் போதனை. ஒரேவிதமான மரியாதையும், மற்றவர்கள் நமக்குச் செய்ய விரும்புகிறபடி நாம் அவர்களுக்குச் செய்ய கொண்டிருக்கும் விருப்பமும் வாழ்க்கையின் பாதி தீமைகளை இல்லாமற்செய்துவிடும். சுயத்தை முக்கியப்படுத்தும் ஆவி, சாத்தானுடைய ஆவி. விருப்பத்தோடு கிறிஸ்துவின் ஆவியை போற்றும் இருதயம் தற்பொழிவை நாடாது அன்பைக் கொண்டிருக்கும். அப்படிப்பட்டவர்கள் “தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக” (பிலிப். 2:4) என்கிற தெய்வீக உத்தரவுகளை கவனிப்பார்கள். (3)

ஆபிரகாமோடு இருந்த இணைப்பே தன்னுடைய செல்வத்திற்குக் காரணமாயிருந்தபோதும், தனக்கு நன்மை செய்தவனுக்கு லோத்து எந்த ஒரு நன்றியையும் வெளிக்காட்டவில்லை. மரியாதை, ஆபிரகாமுடைய தெரிந்துகொள்ளுதலுக்கு ஒப்புக்கொடுக்க கட்டளையிட்டிருக்கும். ஆனால் இதற்குப் பதிலாக, சுயநலமாக எல்லா சாதகங்களையும் தான் அடைந்துகொள்ள அவன் முயற்சித்தான். “லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கோமோராவையும் அழிக்குமுன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது.” முழு பாலஸ்தீனத்திலும் யோர்தான் பள்ளத்தாக்கே மிகவும் செழிப்பான ஒன்றாக—பார்க்கிறவர்களுக்கு இழந்துபோன பரதீசை ஞாபகப்படுத்துகிற ஒன்றாகவும், அவர்கள் சற்றுமுன்பு விட்டுவந்த நைல்நதி செழிப்பாக வைத்திருந்த சமபூமியின் அழகையும் செழிப்பையும் கொண்டதாகவும் இருந்தது. அங்கே, ஐசுவரியமும் அழகுங்கொண்டு, நெரிசலான கடைத்தெருக்களின் இலாபகரமான வியாபாரத்துக்கு அழைத்த

பட்டணங்களும் இருந்தன. உலக ஆதாயத்துக்கடுத்த கற்பனைகளில் மயங்கினவனாக, அங்கே சந்திக்கவேண்டியதிருந்த சனமார்க்க ஆவிக்குரிய தீமைகளை லோத்து கவனிக்கத் தவறினான். அந்த சமபூமியின் மக்கள் "பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்." ஆனால் இவைகளை அவன் அறியாமலிருந்தான். அல்லது அறிந்தும் முக்கியப்படுத்தவில்லை. "லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டான்." அந்த சுயநலமான தெரிந்துகொள்ளுதலின் பயங்கரமான விளைவுகளை அவன் எவ்வளவு குறைவாக முன்கண்டான்! (4)

லோத்து பிரிந்துபோனபின்பு, அந்த தேசம் முழுவதையுங்குறித்த வாக்குத்தத்தத்தை ஆண்டவரிடமிருந்து ஆபிரகாம் மீண்டும் பெற்றான். இதற்குப்பின் சிறிது காலத்திலேயே அவன் எபிரோனுக்குப்போய், மம்ரேயின் கர்வாலி மரங்களின்கீழ் கூடாரம்போட்டு, அதன் பக்கத்தில் ஆண்டவருக்கு ஒரு பலிபீடம் கட்டினான். சோதோம் பாள்ளத்தாக்கின் ஆபத்தான ஆடம்பரத்தை லோத்துவிற்குக் கொடுத்துவிட்டு, அந்த மேடுகளின் சுதந்திரமான காற்றில், அதன் ஒலிவத் தோப்புகளோடும், திராட்சத்தோட்டங்களோடும், அசைந்தாடுகிற பயிர்வெளிகளோடும், சுற்றியிருந்த மலைகளின் மேய்ச்சல் நிலங்களோடும் அவன் தன்னுடைய எளிய, முற்பிதாக்களின் வாழ்க்கையை வாழ்ந்தான். (5)

சுற்றியிருந்த தேசங்களால், வல்லமையான அதிபதியாகவும் ஞானமும் சாமர்த்தியமுமான தலைவனாகவும் ஆபிரகாம் கனம்பண்ணப்பட்டான். அவன் தன் செல்வாக்கை அயலகத்தாரிடமிருந்து மறைக்கவில்லை. உருவ வழிபாடு செய்துகொண்டிருந்தவர்களிலிருந்து குறிப்பிடும் விதத்தில் வேறுபட்டிருந்த அவனுடைய வாழ்க்கையும் குணமும் மெய்யான விசுவாசத்தை காண்பிக்கும் ஒரு செல்வாக்காக இருந்தது. அவனுடைய பழகும்விதமும் மனிதாபிமானமும் அவன்மேல் நம்பிக்கையையும் நட்பையும் தூண்டிவிட்டு, அவனுடைய பாதிக்கப்படாத மேன்மை மரியாதையையும் கனத்தையும் தருவித்தபோது, தேவன்மேலிருந்த அவனுடைய பற்றுறுதி அசைக்கமுடியாததாயிருந்தது. (6)

வைராக்கியமாக காவல்காக்கப்பட்டு, வைத்திருக்கிறவன் மாத்திரமே அனுபவிக்கிற விலையேறப்பெற்ற பொக்கிஷமாக அவனுடைய மதம் வைக்கப்படவில்லை. மெய்யான மதம் அவ்வாறு வைக்கப்படமுடியாது. ஏனெனில் இப்படிப்பட்ட ஆவி, சுவிசேஷத்தின் கொள்கைகளுக்கு முரணானது. கிறிஸ்து இருதயத்தில் வசிக்கும்போது, அவருடைய சமூகத்தின் வெளிச்சத்தை மறைப்பது கூடாத காரியம்; அல்லது அந்த வெளிச்சம்

மங்கிப்போவது கூடாத காரியம். முரணாக, நீதியின் சூரியனுடைய பிரகாசமான பிம்பங்களால், ஆத்துமாவை மூடியிருக்கும் பாவம் மற்றும் சுயநலத்தின் பனி நாளுக்குநாள் விரட்டியடிக்கப்பட, அது பிரகாசத்தின்மேல் பிரகாசம் அடைந்துகொண்டே இருக்கும். (7)

தேவனுடைய ஜனங்கள் பூமியின்மேல் அவருடைய பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அவர்கள் இந்த உலகத்தின் சன்மார்க்க இருளில் வெளிச்சங்களாக இருக்கவேண்டுமென்று அவர் உத்தேசித்திருக்கிறார். தேசங்கள் நகரங்கள் பட்டணங்கள் கிராமங்கள்—எங்கும் சிதறியிருக்கிற அவர்கள், தேவனுடைய சாட்சிகளும், அவிசுவாசமான உலகத்துக்கு அவர் தம்முடைய சித்தத்தைக்குறித்த அறிவையும் தம்முடைய கிருபையின் அதிசயங்களையும் தெரியப்படுத்துகிற அவருடைய வழித்தடங்களாகவும் இருக்கிறார்கள். மாபெரும் இரட்சிப்பில் பங்குபெறும் அனைவரும் அவருடைய ஊழியர்களாக இருக்கவேண்டும் என்பது அவருடைய திட்டம். கிறிஸ்தவனின் பக்தியே உலகத்தார் சுவிசேஷத்தை அளந்துபார்க்கும் தரத்தை உண்டாக்குகிறது. பொறுமையாக சகிக்கப்படுகிற சோதனைகள், நன்றியோடு பெற்றுக்கொள்ளப்படுகிற ஆசீர்வாதங்கள், இயல்பாக காட்டப்படுகிற சாந்தம், தயவு, இரக்கம் மற்றும் அன்பு போன்றவைகள் உலகத்தின் முன்பாக குணத்தின்வழியாக பிரகாசிக்கிற வெளிச்சங்களாக இருந்து, இயற்கையான இருதயத்தின் சுயநலத்திலிருந்து வரும் இருளுக்கு முரணாக இருக்கிறதை வெளிக்காட்டுகிறது. (8)

விசுவாசத்தில் ஐசுவரியமும், பெருந்தன்மையில் உயர்வும், கீழ்ப்படிதலில் தவறாமையும், தன்னுடைய யாத்திரீக வாழ்க்கையின் எளிமையில் தாழ்மையும் கொண்டிருந்த ஆபிரகாம், காரியங்களை நடத்துவதில் ஞானமும், யுத்தத்தில் தைரியமும் திறமையும் கொண்டிருந்தான். புதிய மதத்தின் போதகனாக அறியப்பட்டிருந்தது ஒருபுறமிருந்தபோது, அவன் வசித்தவந்த எமோரிய சமபூமியை ஆண்டுவந்த மூன்று அரச சகோதரர்களும், தேசம் கொடுமையிலும் ஒடுக்கத்திலும் இருந்தபடியால் அதிகமான பாதுகாப்பிற்காக தங்களோடு கூட்டணி வைக்கும்படியாக அவனை வரவேற்று தங்களுடைய நட்பை வெளிக்காட்டினார்கள். இந்த கூட்டணியை உபயோகிக்கும்படியான தருணம் விரைவில் வந்தது. (9)

ஏலாமின் அரசன் கெதர்லாகோமேர், பதினான்கு வருடங்களுக்கு முன்பு கானான்மேல் படையெடுத்து, அதை தனக்குக் கப்பம்கட்ட வைத்திருந்தான். இப்போது சில அதிபதிகள் கலகம் பண்ண, ஏலாமின் இராஜா நான்கு கூட்டணி இராஜாக்களுடன் இவர்களை அடக்கும்படியாக மீண்டும் தேசத்தின்மேல் படையெடுத்தான். கானானின் ஐந்து இராஜாக்கள் தங்கள்

படைகளை இணைத்து, எதிரிட்டு வருகிறவர்களை சித்தீம் பள்ளத்தாக்கிலே சந்தித்தார்கள். ஆனால் முழுவதுமாக வீழ்த்தப்பட்டார்கள். இந்த இராணுவத்தின் பெரிய பகுதி சிதறிப்போனது. தப்பித்தவர்கள் பாதுகாப்பிற்காக மலைகளுக்கு ஓடிப்போனார்கள். ஜெயம் பெற்றவர்கள் சமபூமியின் நகரங்களை கொள்ளையடித்து, அதின் கொள்ளைப்பொருட்களுடனும் அடிமைகளுடனும் திரும்பிச் சென்றார்கள். அவர்களில் லோத்தும் அவன் குடும்பமும் இருந்தது. (10)

மம்ரேயின் கர்வாலி மரத்தோப்புகளில் சமாதானமாக வாழ்ந்து கொண்டிருந்த ஆபிரகாம், தப்பிவந்த ஒருவனிடமிருந்து யுத்தத்தின் செய்தியையும் தன் அண்ணன் மகனுக்கு நேரிட்டதையும் கேள்விப்பட்டான். லோத்தினுடைய நன்றியற்ற செய்கையைக்குறித்த எதையும் ஆபிரகாம் தன் மனதில் விருப்பத்தோடு வைத்திருக்கவில்லை. அவன்மேலிருந்த பிரியம்முழுவதும் எழுப்பப்பட, அவனைக் காப்பாற்றவேண்டும் என்று தீர்மானித்தான். முதலாவது தெய்வீக ஆலோசனையை நாடினவனாக, ஆபிரகாம் யுத்தத்திற்கு தயாரானான். தன்னுடைய சொந்த பாளயத்திலிருந்து, தேவனுக்குப் பயப்படுவதிலும் தங்கள் அதிபதிக்கு சேவை செய்வதிலும் புயபலத்தை உபயோகிப்பதிலும் பயிற்சிபெற்ற முந்நூற்று பதினெட்டுபேரை அழைத்தான். அவனுடைய உடனாளிகளான மம்ரேயும் எஸ்கோலும் ஆநேரும் தங்கள் குழுக்களுடன் அவனோடு சேர்ந்து கொள்ள, ஒன்றிணைந்து, படையெடுத்தவர்களைத் துரத்த புறப்பட்டார்கள். ஏலாமியர்களும் அவன் கூட்டத்தாரும் கானானில் வடக்கு எல்லையான தாணில் கூடாரமிட்டிருந்தார்கள். வெற்றியில் களித்தவர்களாக, முறியடிக்கப்பட்டிருந்த சத்துருக்களின் தாக்குதலைக்குறித்த எந்தவித பயமுமின்றி அவர்கள் களியாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். வெவ்வேறு திசைகளிலிருந்து நெருங்கும்படியாக முற்பிதா தனது படையைப் பிரித்து, அந்த பாளயத்தின்மேல் இரவிலே வந்தான். தீவிரமானதும் எதிர்பார்க்காததுமான அவனுடைய தாக்குதல்கள் அதிசீக்கிர வெற்றியில் முடிந்தது. ஏலாமின் இராஜா கொல்லப்பட்டான். அவனுடைய திடுக்கிட்ட படைகள் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டது. லோத்தும் அவனது குடும்பமும் அனைத்து கைதிகளும் அவர்களுடைய பொருட்களோடுங்கூட மீட்கப்பட்டட்டனர். மிக ஐசுவரியமான கொள்ளை வெற்றிபெற்றவர்களின் கையில் கிடைத்தது. இந்த வெற்றி தேவனுக்குக் கீழிருந்த ஆபிரகாமினுடையதே. யெகோவாவை சேவித்துவந்த அவன், அந்த தேசத்திற்கு பெரிய சேவை செய்தது மாத்திரமல்ல, தன்னை ஒரு வல்லமையானவனென்றும் நிரூபித்தான். நீதிமானாய் இருப்பதென்றால், கோழையாக இருப்பதில்லை என்பதும் காணப்பட்டது. ஆபிரகாமின் மதம், தன் உரிமையை பாராமரிப்பதிலும் ஒடுக்கப்பட்டவர்களை

பாதுகாப்பதிலும் அவனை தைரியமுள்ளவனாக்கிற்று என்பது காணப்பட்டது. அவனுடைய வீரச்செயல் சுற்றியிருந்த கோத்திரங்களிடையே பரவலான செல்வாக்கை கொடுத்தது. அவன் திரும்பிவந்தபோது, சோதோமின் இராஜா வெற்றிகொண்டவனை மதிக்கும்படியாக தன் பரிவாரத்தோடு வந்தான். பொருட்களை எடுத்துக்கொள்ளவும், கைதிகளை மாத்திரம் திரும்பக் கொடுத்துவிடவும் அவன் மன்றாடினான். யுத்த நியமத்தின்படி வெற்றிகொண்டவனுக்கே கொள்ளை சொந்தமாகும். ஆனால் எந்த ஆதாய நோக்கத்தோடும் ஆபிரகாம் பயணித்திருக்கவில்லை. எனவே இந்த அபாக்கியசாலிகளின் நிலையை தனக்குச் சாதகமாக்கிக்கொள்ள மறுத்து, தன்னோடு சேர்ந்து யுத்தத்திற்கு வந்தவர்களுடைய பங்கை மாத்திரம் கோரினான். (11)

இப்படிப்பட்ட சோதனைக்கு உட்படுத்தப்படுவார்களென்றால், வெகு சிலரே ஆபிரகாமைப்போல தங்களை நேர்மையாகக் காண்பிப்பார்கள். நீதி மற்றும் மனிதனின் உரிமைகளை ஆபிரகாம் கருத்தில் கொண்டிருந்தான். “உன்னில் நீ அன்புகூறுவதுபோல் பிறனிலும் அன்புகூறுவாயாக” (லேவி. 19:18) என்ற தேவாவியின் ஏவுதலை அவனுடைய நடக்கை விளக்குகிறது. “ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு, நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்” என்றான். ஆதாயத்திற்காக யுத்தத்தில் ஈடுபட்டான் என்றோ, அல்லது அவர்களுடைய பரிசுகளாலோ அல்லது தயவினாலோ அவன் செழிப்பானான் என்றோ நினைப்பதற்கு அவன் எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுக்கமாட்டான். ஆபிரகாமை ஆசீர்வதிப்பதாக தேவன் வாக்குக்கொடுத்திருக்கிறார். அவருக்கே மகிமை கொடுக்கவேண்டும். (12)

வெற்றிகொண்ட முற்பிதாவை வரவேற்கும்படியாக வந்த மற்றொரு நபர்—படைக்குப் புத்துணர்ச்சி அளிக்கும்படியாக அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்த சாலோமின் இராஜாவாகிய மெல்கிசேதேக்கு. உன்னதமானவருடைய ஆசாரியனாக, அவன் ஆபிரகாமை ஆசீர்வதித்து, தமது ஊழியக்காரன்மூலமாக பெரிய விடுதலையைக் கட்டளையிட்ட ஆண்டவருக்கு நன்றி தெரிவித்தான். “இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்.” (13)

ஆபிரகாம் மகிழ்ச்சியோடு தனது கூடாரங்களுக்கும் மந்தைகளிடத்திற்கும் திரும்பிவந்தான். ஆனால் அவன் மனது உபத்திரவமான

சிந்தைகளால் கலங்கியது. கூடுமானவரையிலும் பகையையும் சண்டையையும் தவிர்த்து வந்த ஒரு சமாதானமான மனிதனான அவன், தான் கண்ட படுகொலையின் காட்சிகளை திகிலோடு திரும்ப நினைத்தான். தான் முறியடித்த தேசங்கள் சந்தேகத்திற்கிடமின்றி கானானின்மேல் மீண்டும் படையெடுத்து, பழிவாங்கவேண்டிய இலக்காக ஆபிரகாமை பார்க்கும். நாடுகளின் சண்டைகளில் இவ்வாறு சம்பந்தப்படுவதால், அவனுடைய வாழ்க்கையின் சமாதானம் நிறைந்த அமைதி அழிந்துபோகும். அதற்குமேலாக, கானானை சுதந்தரித்தவனாக அவன் அதிலே பிரவேசிக்கவில்லை. வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டியிருக்கிற ஒரு சுதந்தரவாளியை பெறவும் இப்போது அவன் எதிர்பார்க்கமுடியாது. (14)

ஒரு இராத்தரிசனத்திலே மீண்டும் தெய்விகக்குரல் கேட்டது. "ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" என்பது அதிபதிகளுக்கு அதிபதியானவரின் வார்த்தைகளாக இருந்தன. இதற்குமுன் செய்ததைப்போல கேள்விகேட்காத நம்பிக்கையோடு வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொள்ள முடியாதோ என்ற அச்சத்தால் அவன் மனம் மிகவும் ஒடுக்கப்பட்டது. அது நிறைவேறும் என்பதற்கான உறுதியான சான்றுக்காக அவன் ஜெபித்தான். குமாரன் என்னும் பரிசு கொடுக்கப்படாதபோது, உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தை எப்படி உணரமுடியும்? "அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே" என்றான். அவனுடைய நம்பிக்கைக்குரிய வேலைக்காரன் எலியேசரை தத்தெடுப்பதன் வழியாக குமாரனாகவும் சொத்துக்களின் சுதந்தரவாளியாகவும் ஆக்கும்படி ஆலோசனை கூறினான். ஆனால் அவனுடைய சொந்த குமாரனே சுதந்தரவாளியாகவேண்டும் என்று அவனுக்கு நிச்சயமாகக் கூறப்பட்டது. பின்னர் வெளியே நடத்தப்பட்டு மேலே வானங்களிலே பிரகாசிக்கிற எண்ணக்கூடாத நட்சத்திரங்களை பார்க்கும்படியாக சொல்லப்பட்டான். அவன் பார்த்தபோது, "உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்" என்று சொல்லப்பட்டது. "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது"—ரோமர் 4:3. (15)

தன்னுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், அவர்களைக்குறித்த தேவனுடைய கிருபை நிறைந்த நோக்கங்கள் நிறைவேறும் என்பதற்கு பின்வரும் தலைமுறைகளுக்கு சான்றாக இருக்கவும் காணக்கூடிய சில அடையாளங்களுக்காக முற்பிதா இன்னமும் மன்றாடினான். பவித்திரமான ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும்படி மனிதர்களுக்குள்ளே இருந்த வழக்கத்தை

உபயோகித்து தமது ஊழியக்காரனோடு ஒரு உடன்படிக்கை செய்ய ஆண்டவர் இறங்கினார். தெய்வீக நடத்துதலின்படி ஒவ்வொன்றும் மூன்று வயதாயிருந்த ஒரு கிடாரியையும், ஒரு வெள்ளாட்டையும், ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டு, அவைகளின் உடல்களை ஆபிரகாம் பிரித்து வைத்தான். இவைகளோடு ஒரு காட்டுப்புறாவையும் புறாக்குஞ்சையும் சேர்த்துக்கொண்டான். அவைகள் துண்டிக்கப்படவில்லை. இப்படிச்செய்தபின்பு, பயபக்தியோடு துண்டங்களின் நடுவாக கடந்து, நிலையான கீழ்ப்படிதலைக்குறித்த ஒரு பவித்திரமான வாக்கை கொடுத்தான். கவனிப்போடும் உறுதியாகவும் இருந்து, தீட்டுப்படுவதிலிருந்தும் இரை கவ்வுகிற பறவைகளால் பட்சிக்கப்படுவதிலிருந்தும் அவைகளை பாதுகாப்பதற்காக, சூரியன் அஸ்தமிக்கும்வரையிலும் அந்த உடல்களின் பக்கத்திலே அவன் நின்றான். சூரியன் அஸ்தமித்தபோது அவன் அயர்ந்த நித்திரைக்குள் போனான். "திகிலும் காரிருளும் அவனை மூடிக்கொண்டது." வாக்குத்தத்த நாட்டை உடனடியாக சுதந்தரிப்பதை எதிர்பார்க்காதிருக்கவும், அவனுடைய சந்ததி கானானில் ஸ்தாபிக்கப்படுவதற்குமுன்பாக அடையப்போகிற பாடுகளை சுட்டிக்காட்டியும் தேவனுடைய சத்தம் கேட்கப்பட்டது. மாபெரும் தியாகபலியான கிறிஸ்துவின் மரணமும் பின்னர் அவருடைய மகிமையான வருகையும் மீட்பின் திட்டத்தை இங்கே அவனுக்கு திறந்து காட்டியது. வாக்குத்தத்தத்தின் முழுமையான நிறைவேறுதலை—பூமி ஏதேனின் அழகிற்கு மீண்டும் கொண்டுவரப்படுவதையும், நித்திய சுதந்தரமாக அவனுக்குக் கொடுக்கப்படவிருக்கிறதையும் ஆபிரகாம் பார்த்தான். (16)

தேவன் மனிதனோடு செய்த இந்த உடன்படிக்கையின் வாக்குறுதியாக புகைகிற சூளையும் நெருப்பும்—தெய்வீக சமூகத்தின் அடையாளங்களாக பிரிக்கப்பட்ட பலிகளின் நடுவே கடந்துபோய் அவைகளை முழுமையாக பட்சித்துப்போட்டது. "எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ள" கானான் தேசத்தை அவனுடைய பின்சந்ததிக்கு ஈவாக கொடுப்பதை உறுதிப்படுத்தும் சத்தம் மீண்டும் ஆபிரகாமால் கேட்கப்பட்டது. (17)

ஏறக்குறைய இருபத்து ஐந்து வருடங்களாக ஆபிரகாம் கானானில் இருந்தபோது ஆண்டவர் அவனுக்கு தரிசனமாகி, "நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு" என்றார். பயபக்தியோடு முற்பிதா தலைகவிழ்ந்து பணிந்துகொண்டான். "நான் உன்னோடே பண்ணுகிற என் உடன்படிக்கை என்னவென்றால், நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்" என்று செய்தி தொடர்ந்தது. இந்த உடன்படிக்கை நிறைவேறுவதன் அடையாளமாக, ஆபிராம் என்று இருந்த

அவன் பெயர் “திரளான ஜாதிகளுக்குத் தகப்பன்” என்று பொருள்படும் ஆபிரகாம் என்று மாற்றப்பட்டது. சாராயின் பெயர், “இளவரசி” என்று பொருள்படும் சாராள் என்று மாற்றப்பட்டது. அவள், “ஜாதிகளுக்குத் தாயாக இருப்பாள்; அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாவார்கள்” என்று தெய்வீக சத்தம் கூறியது. (18)

இந்த சமயத்தில், அவன் “விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக” (ரோமர் 4:11) விருத்தசேதன சடங்கு ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் தேவனுடைய சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்பதற்கும், இவ்வாறாக விக்கிரக ஆராதனைக்காரரைவிட்டு பிரிக்கப்பட்டவர்கள் என்பதற்கும், தமது சொந்த சம்பத்தாக தேவன் அவர்களை ஏற்றுக்கொண்டார் என்பதற்கும் அடையாளமாக, அது முற்பிதாவினாலும் அவனுடைய பின்சந்ததியாராலும் கைக்கொள்ளப்படவேண்டும். இந்தச் சடங்கின்வழியாக ஆபிரகாமோடு செய்யப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளில் தங்கள் பங்கை நிறைவேற்ற அவர்கள் உறுதிசெய்தனர். அவர்கள் புறசமயத்தவரோடு திருமண உறவு ஏற்படுத்தக்கூடாது. ஏனென்றால், அப்படித் திருமணம் செய்யும்போது, தேவனுக்கும் அவருடைய பரிசுத்த பிரமாணங்களுக்கும் தரவேண்டிய பயபக்தியை அவர்கள் இழந்துபோவார்கள்; மற்ற நாடுகளின் பாவபழக்கங்களில் ஈடுபட சோதிக்கப்பட்டு விக்கிரகாராதனை செய்ய வஞ்சிக்கப்படுவார்கள். (19)

தேவன் ஆபிரகாமின்மேல் மாபெரும் கனத்தை வைத்தார். நண்பனோடு ஒரு நண்பன் நடந்து பேசுவதைப்போல பரலோகத்தூதர்கள் அவனோடு நடந்து அவனோடு பேசினார்கள். சோதோமின்மேல் நியாயத்தீர்ப்புகள் அனுப்பப்படவிருந்தபோது, அது அவனிடமிருந்து மறைக்கப்படவில்லை. அவன் தேவனிடத்திலே பாவிகளுக்காக மன்றாடும் ஒருவனானான். தூதர்களோடு அவன் கொண்ட நேர்முகம், உபசரிப்பைக்குறித்த அழகான ஒரு உதாரணத்தையும் தருகிறது. (20)

தூரத்திலே மூன்று பயணிகள் தன்னை நோக்கி வருவதைக் கண்டபோது, உஷ்ணமான கோடைகால மதியான வேளையிலே, முற்பிதா தனது கூடார வாசலில் அமர்ந்து அமைதியான நிலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். கூடாரத்தை அடையும்முன் அந்த அந்நியர்கள் தங்கள் செயலைக்குறித்து ஆலோசிப்பதுபோலச் சற்று தாமதித்தனர். அவர்கள் வந்து உதவிகள் கேட்கும்வரை காத்திருக்காது, ஆபிரகாம் துரிதமாக எழுந்தான். வெளிப்படையாக அவர்கள் வேறு ஒரு திசையில் திரும்பினபோது, அவன் அவர்கள்பின் துரிதமாகச் சென்று, மிக உயர்ந்த

மரியாதையோடு, சிற்றுண்டிக்காக சற்று தாமதிப்பதின்வழியாக தன்னைக் கனப்படுத்தவேண்டுமென்று வலியுறுத்தினான். அவர்கள் பயணத்தின் தூசியை தங்கள் பாதங்களிலிருந்து கழுவும்படி அவன் தன் சொந்த கைகளால் தண்ணீர் கொண்டுவந்தான். அவனே அவர்களுடைய உணவை தெரிந்தெடுத்தான். குளுமையான நிழலில் அவர்கள் இளைப்பாறினபோது, ஒரு உணவு தயாரிக்கப்பட்டது. அவனுடைய உபசரிப்பில் அவர்கள் பங்குகொண்டபோது, அவர்களுக்குப் பக்கத்தில் அவன் மரியாதையோடு நின்றிருந்தான். இந்த மரியாதையான செயலை, தமது வார்த்தையில் பதிவு செய்வதற்குப் போதுமான முக்கியத்துவம் கொண்டதாக தேவன் கருதினார். ஆயிரம் வருடங்கள் கழித்து, தேவ ஆவியால் ஏவப்பட்ட அப்போஸ்தலனால், "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" (எபி. 13:2) என்று இது குறிப்பிடப்பட்டது. (21)

தனது விருந்தாளிகளில் ஒருவர், தான் பாவமில்லாமல் ஆராதிக்கக்கூடிய ஒருவர் என்பதை சிறிதும் சிந்திக்காது, அவர்களில் சோர்வடைந்திருந்த மூன்று பிரயாணிகளையே ஆபிரகாம் கண்டான். ஆனால் பரலோகத் தூதுவருடைய மெய்யான குணம் இப்போது வெளிப்பட்டது. அவர்கள் உக்கிரத்தின் தூதர்களாக தங்கள் பாதையில் சென்றுகொண்டிருந்தபோதும், ஆபிரகாமிற்கு, விசுவாச மனுஷனாகிய அவனுக்கு ஆசீர்வாதங்களை முதலாவது கொடுத்தனர். அக்கிரமத்தை குறிப்பதிலும் மீறுதலை தண்டிக்கிறதிலும் தேவன் கண்டிப்பானவராக இருப்பினும், பழிவாங்குவதில் அவர் பிரியம் கொள்ளுவதில்லை. அழிவின் வேலை நித்திய அன்புகொண்ட அவருக்கு அபூர்வ வேலையாக இருக்கிறது. (22)

"கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது"—சங். 25:14. ஆபிரகாம் தேவனை கனம்பண்ணினான். அவனை தமது ஆலோசனைகளுக்குள் எடுத்துச்சென்று, தமது நோக்கங்களை அவனுக்கு வெளிப்படுத்துவதின்வழியாக, ஆண்டவர் அவனைக் கனம்பண்ணினார். கர்த்தர்: "நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?" என்றார். "பின்பு கர்த்தர்: சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும், நான் இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்றார்." சோதோமின் குற்ற அளவு தேவனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் தமது நடவடிக்கைகளின் நீதி புரிந்துகொள்ளப்படும்படியாக

மனிதனைப்போல அவர் தம்மை வெளிப்படுத்தினார். மீறுகிறவர்கள்மேல் நியாயத்தீர்ப்புகளை அனுப்பும்முன்பாக அவர்தாமே சென்று அவர்களுடைய வழியை சோதித்தறிய ஏற்பாடு செய்கிறார். அவர்கள் தெய்வீக எல்லையை மீறாதிருந்தார்களானால், மனந்திரும்புவதற்கான காலத்தை இன்னமும் அவர்களுக்குக் கொடுப்பார். (23)

தேவனுடைய குமாரனென்று ஆபிரகாம் இப்பொழுது அறிந்திருந்த அவர்களில் ஒருவரோடு ஆபிரகாமை தனியேவிட்டு மற்ற இரண்டு பரலோகத் தூதுவர்களும் சென்றனர். அந்த விசுவாசமனிதன் சோதோமின் குடிகளுக்காக மன்றாடினான். ஒருமுறை அவர்களை அவன் பட்டயத்தால் தப்புவித்தான். இப்போது ஜெபத்தினால் அவர்களைத் தப்புவிக்க முயற்சித்தான். லோத்தும் அவன் வீட்டாரும் இன்னும் அங்கே வசித்துவந்தனர். ஏலாமியரிடமிருந்து அவர்களைக் காப்பாற்ற ஆபிரகாமை உந்தப்பண்ணின அதே சுயநலமற்ற அன்பு, இப்போது தேவனுக்குச் சித்தமானால் தெய்வீக நியாயத்தீர்ப்புகளின் சீற்றத்திலிருந்தும் அவர்களை தப்புவிக்க நாடியது. (24)

ஆழ்ந்த பக்தியோடும் தாழ்மையோடும் “தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்” என்று தன் மன்றாட்டை வலியுறுத்தினான். அங்கே எந்தவித சுயநம்பிக்கையும் இல்லை; தன்னுடைய சொந்த நீதியைக்குறித்த மேட்டிமையும் இல்லை. தன்னுடைய கீழ்ப்படிதலினிமித்தமோ அல்லது தேவனுடைய சித்தம் செய்ய தான் செய்த தியாகத்தினிமித்தமோ தேவ தயவை அவன் உரிமை கோரவில்லை. தானே ஒரு பாவியாக இருந்தபோதும், பாவிகளுக்காக மன்றாடினான். தேவனை நெருங்கும் அனைவரும் இப்படிப்பட்ட ஆவியைக் கொண்டிருக்கவேண்டும். என்றபோதும், அன்பான தகப்பனிடம் மன்றாடுகிற குழந்தையின் நம்பிக்கையை அவன் வெளிக்காட்டினான். பரலோகத் தூதுவரின் அருகில் வந்து, தன் மன்றாட்டை ஊக்கமாக வலியுறுத்தினான். லோத்து சோதோமில் குடியிருந்தபோதும் அவ்வூராரின் அக்கிரமங்களில் பங்குகொள்ளவில்லை. அந்த ஜனம்நிறைந்த பட்டணத்தில் மெய்யான தேவனை வணங்குகிற வேறு சிலரும் இருக்கவேண்டும் என்று ஆபிரகாம் நினைத்தான். இந்தக் கண்ணோட்டத்தில்தான் அவன்: “துன்மார்க்கனோடே நீதிமானையும் சங்கரிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; ... உமக்குத் தூரமாயிருப்பதாக; சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ” என்று மன்றாடினான். ஆபிரகாம் ஒருமுறை மாத்திரமல்ல, அநேகமுறை கேட்டான். அவனுடைய விண்ணப்பம் கேட்கப்பட்டபோது அவன் தைரியமடைந்து, பத்து நீதிமான்கள் அதில் காணப்பட்டால்கூட அந்த நகரம் அழிக்கப்படாது என்னும் நிச்சயத்தை அடையும்வரை தொடர்ந்தான். (25)

அழிந்துகொண்டிக்கும் ஆத்துமாக்களிள்மேலிருந்த அன்பு ஆபிரகாமை ஜெபிக்கத் தூண்டியது. கெட்டுப்போன அந்தப் பட்டணத்தின் பாவங்களை அருவருத்த அதேநேரம், பாவிகள் காப்பாற்றப்படவேண்டும் என்று அவன் விரும்பினான். சோதோமின்மேலிருந்த அவனுடைய ஆழமான வாஞ்சை, மனந்திரும்பாத பாவிகள்மேல் நாம் உணரவேண்டிய வேதனையைக் காண்பிக்கிறது. பாவத்தின்மேலுள்ள வெறுப்பை நாம் நெஞ்சார நேசித்து, பாவிகள்மேல் பரிதாபத்தையும் அன்பையும் காட்டவேண்டும். சோதேமின்மேல் விழுந்த அதே பயங்கரமான நம்பிக்கையற்ற அழிவிற்குள்ளாக நம்மைச் சுற்றிலும் ஆத்துமாக்கள் விழுந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாளும் சிலருடைய கிருபையின்காலம் முடிந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு மணிநேரமும் கிருபையின் தொடுதலுக்கு அப்பால் சிலர் போய்க்கொண்டிருக்கிறார்கள். இந்த பயங்கரமான அழிவிலிருந்து ஓடும்படி பாவியை அழைக்கிற எச்சரிப்பு மற்றும் மன்றாட்டின் சத்தங்கள் எங்கே? மரணத்திலிருந்து அவனை பின்னுக்கு இழுக்கும்படி நீட்டப்பட்டிருக்கிற கரங்கள் எங்கே? அவனுக்காக தேவனிடம் தாழ்மையோடும் விடாப்பிடியான விசுவாசத்தோடும் மன்றாடுகிறவர்கள் எங்கே? (26)

ஆபிரகாமினுடைய ஆவி, கிறிஸ்துவின் ஆவியே. தேவகுமாரன்தாமே பாவிக்காக மன்றாடுகிற மாபெரும் மத்தியஸ்தராக இருக்கிறார். அவனுடைய மீட்பிற்கான கிரயத்தைச் செலுத்தியிருக்கிறவர் மனித ஆத்துமாவின் மதிப்பை அறிந்திருக்கிறார். துளியும் கறையில்லாத தூய்மையானவரின் இயல்பிலே மாத்திரமே இருக்கக்கூடிய—தீமையின்மேலிருக்கும் வெறுப்போடு, நித்தியமான நல்லவர் மாத்திரமே கொண்டிருக்கக்கூடிய அன்பை, கிறிஸ்து பாவியின்மேல் வெளிக்காட்டுகிறார். சிலுவை மரணத்தின் வேதனைகளில், முழு உலகத்தின் பயங்கரமான பாவபாரத்தால் தாமே பாரமடைந்திருந்தும், தம்மை பரிகசிக்கிறவர்களுக்காகவும் கொலைசெய்கிறவர்களுக்காகவும் "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக்கா 23:34) என்று அவர் ஜெபித்தார். (27)

ஆபிரகாம் "தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்" "விசுவாசிக்கிற யாவருக்கும் ... அவன் தகப்பனாயிருக்கும்படிக்கும்" (யாக். 2:23; ரோமர் 4:11) என்று அவனைக்குறித்து எழுதப்பட்டிருக்கிறது. . இந்த விசுவாசமான முற்பிதாவைக்குறித்த தேவனுடைய சாட்சி: "ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினால்," மீண்டும்: "கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்:

நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்" என்பதே. உலகத்திற்கான தேவனுடைய சத்தியத்தை நூற்றாண்டுகளாக காவல்காத்து பாதுகாத்து இருக்கப்போகிற ஜனத்திற்கு—வாக்குப்பண்ணப்பட்ட மேசியாவின் வருகையினால் பூமியிலுள்ள ஜனங்களெல்லாம் யாருக்குள் ஆசீர்வதிக்கப்படபோகிறார்களோ, அந்த ஜனத்திற்கு தகப்பனாக இருக்கும்படி ஆபிரகாம் அழைக்கப்பட்ட அழைப்பு மிகவும் உயர்ந்த கனமான அழைப்பு. முற்பிதாவை அழைத்தவர், அவனைத் தகுதியுள்ளவனென்று தீர்த்தார். தேவனே பேசுகிறவர். தூரத்திலிருந்து நினைவுகளைப் புரிந்துகொண்டு, மனிதன்மேல் சரியான மதிப்பைப் வைக்கிறவர்: "அறிந்திருக்கிறேன்" என்கிறார். ஆபிரகாமின் பங்கில் எந்த சுயநலமான நோக்கத்திற்கும் அவன் சத்தியத்தை விற்றுவிடமாட்டான்; அவன் கற்பனைகளைக் கைக்கொண்டு, நீதியும் நியாயமும் செய்வான்; அவன் தான்மாத்திரம் ஆண்வடருக்கு பயப்படாமல், தன் இல்லத்திலும் மதத்தை வளர்ப்பான்; தன் குடும்பத்தை நீதியில் போதிப்பான்; அவனுடைய வீட்டில் தேவனுடைய கற்பனையே சட்டமாக இருக்கும். (28)

ஆபிரகாமின் வீட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆத்துமாக்கள் இருந்தார்கள். அவனுடைய போதனையால் ஒன்றான தேவனை தொழுதுகொள்ள நடத்தப்பட்டவர்கள், அவனது பாளயத்தில் ஒரு இல்லத்தைக் கண்டனர். அங்கே, ஒரு கல்விக்கூடத்தில் பெறுவதைப்போல, மெய்யான விசுவாசத்தின் பிரதிநிதிகளாயிருக்க அவர்களை ஆயத்தப்படுத்துகிற இப்படிப்பட்ட போதனையை அவர்கள் பெற்றனர். இவ்வாறாக, பெரும் பொறுப்பு அவன்மேல் தங்கியிருந்தது. அவன் குடும்பங்களின் தலைவர்களை பயிற்றுவித்தான். அவனுடைய ஆட்சிமுறை, அவர்களுடைய குடும்பங்களில் செயல்படுத்தப்பட்டது. (29)

ஆரம்பகாலங்களில் தகப்பனே தன்னுடைய சொந்தக் குடும்பத்தின் அதிபதியாகவும் ஆசாரியனாகவும் இருந்து, தன் பிள்ளைகள் அவர்களுக்குச் சொந்த குடும்பங்களை பெற்றபிறகும், அவர்கள்மேல் அதிகாரம் கொண்டிருந்தான். அவனுடைய பின்சந்ததியினர் மதத்திலும் உலகக்காரியங்களிலும் அவனையே தங்கள் தலைவனாகப் பார்க்கும்படி கற்பிக்கப்பட்டிருந்தனர். இந்த முற்பிதாக்களின் ஆட்சிமுறை தேவனைக்குறித்த அறிவை பாதுகாத்ததால், இதை நிலைத்திருக்கச்செய்ய ஆபிரகாம் முயற்சித்தான். மிக பரவலாக, மிக ஆழமாக வேர்கொண்டிருந்த உருவவழிபாட்டிற்கு எதிரான தடையை எழுப்ப, குடும்ப நபர்களை ஒன்றாக இணைக்கவேண்டியது அவசியமாயிருந்தது. தீமையோடு

பரீட்சயமாவது அறியாமலேயே கொள்கைகளை கெடுத்துப்போடும் என்று அவன் அறிந்திருந்ததால், தன் பாளயத்திற்குள் தங்கியிருந்தவர்கள் அஞ்ஞானிகளோடு கலப்பதற்கும் அவர்களுடைய விக்கிரக பழக்கங்களை பார்ப்பதற்கும் எதிராக, தன் பலத்தில் இருந்த ஒவ்வொன்றின் வழியாகவும் அவன் தேடினான். பொய்மதத்தின் ஒவ்வொரு வழிமுறைக்கும் கதவை அடைத்து, தொழுகையின் மெய்யான நோக்கமாக மனங்களை ஜீவனுள்ள தேவனுடைய மாட்சிமையினாலும் மகிமையினாலும் உந்த, மிக அதிக கவனம் கொடுக்கப்பட்டது. (30)

அஞ்ஞானிகளுடைய தொடர்பிலிருந்து தமது ஜனங்களை கூடுமானவரை துண்டித்து, ஜாதிகளோடு எண்ணப்படாதபடி அவர்களை தனித்து வாசம்பண்ணும் மக்களாக்க, தேவன் தாமே ஏற்படுத்தின ஏற்பாடு ஞானமான ஏற்பாடு. முற்பிதா தனது குடும்பத்தை மெசபத்தோமியாவிலே அவர்களைச் சுற்றியிருந்த வஞ்சிக்கும் பாதிப்புகளுக்கு அப்பால் பயிற்றுவித்து போதிக்கவும், தலைமுறை தலைமுறையாக அவனுடைய சந்ததியினரால் மெய்யான விசுவாசம் அதன் பரிசுத்தத்தில் பாதுகாக்கப்படவும்தக்கதாக, அவர் ஆபிரகாமை விக்கிரகங்களை வணங்கின அவனது இனத்தாரிடமிருந்து பிரித்தார். (31)

ஆபிரகாம் தனது பிள்ளைகள்மேலும் தனது குடும்பத்தார்மேலும் வைத்திருந்த பிரியம், அவர்களுடைய மதவிசுவாசத்தை பாதுகாக்கவும், அவர்களுக்குக் விலைமதிப்புள்ள பரம்பரை சொத்தாக தெய்வீக நியமங்களைக்குறித்த அறிவை கொடுக்கவும், அவர்கள் வழியாக அதை உலகத்துக்குக் கொடுக்கவும் அவனை நடத்தியது. தாங்கள் பரலோக தேவனுடைய அதிகாரத்தின்கீழ் இருப்பதாக அனைவரும் போதிக்கப்பட்டனர். பெற்றோர்களின் பங்கிலே எந்த ஒடுக்குதலும், பிள்ளைகள் பங்கிலே எந்தக் கீழ்ப்படியாமையும் இருக்கக்கூடாது. தேவனுடைய கற்பனை ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய கடமைகளை நியமித்திருந்தது. அதற்குக் கீழ்ப்படிவதன் வழியாகவே எவராயிருப்பினும் அவர்கள் மகிழ்ச்சியையாவது செழிப்பையாவது அடையமுடியும். (32)

அவனுடைய சொந்த உதாரணம், அவனுடைய அனுதின வாழ்க்கையின் மௌனமான செல்வாக்கு, ஒரு நிலையான பாடமாக இருந்தது. அசையாத உண்மையும், அரசர்களின் புகழ்ச்சியையும் சம்பாதித்திருந்த தாராளமும் சுயநலமற்ற மரியாதையும் வீட்டிலே வெளிக்காட்டப்பட்டது. அந்த வாழ்க்கையிலே ஒரு நறுமணம் இருந்தது. குணத்தில் ஒரு நேர்மையும், அழகும் இருந்தது. அது அவன் பரலோகத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறான் என்று அனைவருக்கும் வெளிப்படுத்தியது. மிகவும்

தாழ்மையான வேலையாளையும் அவன் புறக்கணிக்கவில்லை. அவன் வீட்டிலே அதிபதிக்கு ஒரு சட்டமும் வேலையாளுக்கு மற்றொரு சட்டமும், ஐசுவரியவானுக்கு இராஜ பாதையும் ஏழைக்கு வேறொரு பாதையும் இருக்கவில்லை. வாழ்க்கையின் கிருபையை அவனோடுகூட சுதந்தரித்துக் கொண்டவர்களைப்போல அனைவரும் நீதியோடும் இரக்கத்தோடும் நடத்தப்பட்டார்கள். (33)

"தன் வீட்டாருக்கு ... கட்டளையிடுவான்." தன் பிள்ளைகளின் தீய குணங்களை கண்டிக்காமல் விடுகிற ஒரு பாவ புறக்கணிப்பும், பலவீனமான ஞானமற்ற, சிலர்மேல் பிரியங்காண்பிக்கிறதும் அங்கே இருக்காது. பிரியம் என்று தவறாக புரிந்துகொள்ளப்படும் உரிமைகளுக்காக தன் கடமையைக்குறித்த உணர்வை விட்டுவிடமுடியாது. ஆபிரகம் சரியான போதனையை கொடுப்பது மாத்திரமல்ல; நீதியும் நியாயமுமான சட்டங்களின் அதிகாரத்தை பராமரிக்கவும் செய்வான். (34)

இந்த உதாரணத்தைப் பின்பற்றுகிறவர்கள் இன்றைக்கு எவ்வளவு குறைவான பேர்களாயிருக்கிறார்கள்! அநேக பெற்றோர்களில் அன்பு என்று தவறாக அழைக்கப்படுகிற—பிள்ளைகளை முழுமையடையாத அறிவோடும் ஒழுங்கற்ற உணர்ச்சிகளோடும் அவர்களுடைய சொந்த விருப்பங்களுக்கு விட்டுவிடுவதில் வெளிக்காட்டப்படுகிற—கண்மூடித்தனமும் சுயநலமுமான உணர்ச்சியும் இருக்கிறது. இது வாலிபருக்கு இழைக்கப்படும் மிகப்பெரிய கொடுமையும், உலகத்துக்கு இழைக்கப்படும் பெரிய தவறுமாயிருக்கிறது. பெற்றோரின் திளைப்பு குடும்பத்திலும் சமுதாயத்திலும் ஒழுங்கற்ற நிலையை உண்டாக்குகிறது. அது தெய்வீக கோரிக்கைகளுக்கு ஒப்புக்கொடுப்பதை விடுத்து, தங்களுடைய நாட்டங்களை பின்பற்றும் விருப்பத்தை வாலிபர்களில் உறுதிப்படுத்துகிறது. இவ்வாறாக, தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் வெறுப்புகொண்ட இருதயத்தோடு அவர்கள் வளர்ந்து, தங்களுடைய பக்தியற்ற கீழ்ப்படியாத ஆவியை தங்கள் பிள்ளைகளுக்கும் தங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் கடத்துகிறார்கள். ஆபிரகாமைப்போல பெற்றோர்கள் தங்கள் வீட்டாரை தங்களுக்குப் பின்வரும்படி கட்டளையிடவேண்டும். தேவனுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படியும் முதல்படியாக, பெற்றோர்களின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிவது கற்பிக்கப்பட்டு, வலியுறுத்தப்படக்கடவது. (35)

மதத்தலைவர்களாலுங்கூட தேவனுடைய பிரமாணங்கள் சாதாரணமாக எண்ணப்படுவது, மாபெரும் தீமையை உண்டாக்குகிறது. தெய்வீக பிரமாணங்கள் மனிதன்மேல் கட்டுப்பாடு கொண்டில்லை என்று பிரபலமாகியிருக்கிற போதனை, மனிதர்களின் சன்மார்க்க அறிவின்மேல்

பாதிப்பை ஏற்படுத்தும் உருவவழிபாட்டை ஒத்ததே. தேவனுடைய பரிசுத்த பிரமாணங்களின் உரிமைகளை குறைக்கத் தேடுகிறவர்கள், குடும்பங்களும் ஜாதிகளும் கொண்ட அரசாங்கத்தின் அஸ்திபாரத்தை நேரடியாக தாக்குகிறார்கள். அவருடைய பிரமாணங்களின்படி நடக்காத ஆவிக்குரிய பெற்றோர்கள், கர்த்தரின் வழியைக் காக்கும்படி தங்கள் வீட்டாருக்கும் கட்டளையிடுவதில்லை. தேவனுடைய கற்பனை வாழ்க்கையின் சட்டமாக்கப்படவில்லை. பிள்ளைகள் தங்கள் சொந்த இல்லங்களை உருவாக்கும்போது, தங்களுக்கு ஒருபோதும் கற்பிக்கப்படாததை தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் கடமையில் இருப்பதை உணருவதில்லை. இதனால்தான் அநேக தேவனற்ற குடும்பங்கள் இருக்கின்றன. இதனால்தான் சீரழிவு ஆழமும் பரவலானதுமாயிருக்கிறது. (36)

பெற்றோர்கள்தாமே கர்த்தருடைய சட்டங்களில் தங்கள் பூரணமான இருதயத்தோடு நடக்கும்வரைக்கும், தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்க ஆயத்தமற்றவர்களாயிருக்கிறார்கள். இவ்விதத்தில் ஒரு மறுமலர்ச்சி—ஆழமும் அகலமுமாக ஒரு மறுமலர்ச்சி தேவைப்படுகிறது. பெற்றோர்கள் மாறவேண்டும். ஊழியர்கள் மாறவேண்டும்; அவர்கள் வீடுகளிலே அவர்களுக்கு ஆண்டவர் தேவை. அவர்கள் வேறுவிதமான காரியங்களைப் பார்க்கவேண்டுமென்றால், அவருடைய வார்த்தையை தங்கள் குடும்பங்களுக்குள் கொண்டுவந்து, அதை தங்களுடைய ஆலோசகராக ஆக்கவேண்டும். இது தங்களுக்குச் சொல்லப்படுகிற தேவனுடைய சத்தம் என்றும், அது குறிப்பாகக் கீழ்ப்படியப்படவேண்டும் என்றும் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பொறுமையாக போதிக்கவேண்டும். தயவாகவும், சோர்வடையாமலும் தேவனைப் பிரியப்படுத்தும்படி வாழ்வது எப்படி என்று கற்பிக்கவேண்டும். அப்படிப்பட்ட வீடுகளின் குழந்தைகள் தெய்வபக்தியற்றவர்களின் தந்திரங்களை சந்திக்க ஆயத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வேதாகமத்தை தங்கள் விசுவாசத்திற்கு அடிப்படையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சமயநம்பிக்கையற்றவர்களால் வரும் சந்தேக அலைகளால் அடிக்கப்பட்டுப்போகாத அஸ்திபாரத்தைக் கொண்டிருக்கிறார்கள். (37)

அநேக குடும்பங்களில் ஜெபம் நெகிழப்படுகிறது. காலை மாலை ஜெபங்களுக்கு நேரம் இல்லையென்று பெற்றோர்கள் உணருகிறார்கள். அவருடைய ஏராளமான கிருபைகளுக்காக—தாவர இனங்களை செழிக்கச் செய்கிற ஆசீர்வாதமான சூரிய ஒளிக்காகவும், மழைத்துளிகளுக்காகவும், பரிசுத்த தூதர்களின் பாதுகாவலுக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்த சில மணித்துளிகளை அவர்களுக்குக் கொடுக்கமுடியாது. தெய்வீக

உதவிக்காகவும், நடத்துதலுக்காகவும் வீட்டிலே தங்கியிருக்கும் இயேசுவின் சமுகத்திற்காகவும் ஜெபிக்க அவர்களுக்கு நேரமில்லை. தேவனைப்பற்றிய அல்லது பரலோகத்தைப்பற்றிய ஒரு சிந்தைகூட இல்லாத, மாடுகளைப்போலவோ அல்லது குதிரைகளைப்போலவோ உழைக்கச் செல்லுகிறார்கள். நம்பிக்கையின்றி அழிந்துபோக அனுமதிக்காமல், அவைகளை மீட்கும்படியாக தேவகுமாரன் தம் ஜீவனையே கொடுத்திருக்கிற விலைமதிப்புள்ள ஆத்துமாக்களாக அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவருடைய மாபெரும் மேன்மையைக்குறித்த போற்றுதல் அழிந்துபோகிற மிருகங்களுக்கு இருப்பதைவிட கொஞ்சமும் அதிகமாக இல்லை. (38)

தேவனை நேசிக்கிறதாக சொல்லுகிறவர்கள் பழங்கால முற்பிதாக்களைப்போல, எங்கெல்லாம் தங்கள் கூடாரங்களைப் போடுகிறார்களோ, அங்கெல்லாம் ஒரு பலிபீடத்தைக் கட்டவேண்டும். ஒவ்வொரு வீடும் ஜெபவீடாக இருக்கவேண்டும் என்கிற காலம் ஒன்று இருந்திருக்குமானால், அது இதுதான். தங்களுக்காகவும் தங்கள் பிள்ளைகளுக்காகவும் தகப்பன்மார்களும் தாய்மார்களும் தங்கள் இருதயங்களை தாழ்மையான விண்ணப்பங்களோடு தேவனிடம் உயர்த்தவேண்டும். மனைவியும் பிள்ளைகளும் ஜெபத்திலும் துதியிலும் இணைய, வீட்டின் ஆசாரியனாக தகப்பன் காலை மாலை பலிகளை தேவனுடைய பலிபீடத்தின்மேல் வைக்கட்டும். அப்படிப்பட்ட இல்லங்களில் தங்கியிருக்க இயேசு விரும்புவார். (39)

ஒவ்வொரு கிறிஸ்தவ இல்லத்திலிருந்தும் ஒரு பரிசுத்த ஒளி பிரகாசிக்கவேண்டும். அன்பு செயலிலே வெளிப்படுத்தப்படவேண்டும். அது வீட்டின் எல்லா சம்பாஷணையிலும் பாய்ந்து, கரிசனையான தயவிலும் மென்மையிலும் சுயநலமற்ற மரியாதையிலும் தன்னைக் காட்டவேண்டும். இந்தக் கொள்கை செயல்படுத்தப்படுத்தப்படுகிற—தேவன் ஆராதிக்கப்பட்டு, மெய்யான அன்பு ஆட்சிசெய்கிற இல்லங்கள் உண்டு. இந்த இல்லங்களிலிருந்து சுகந்த வாசனையாக காலை மாலை ஜெபங்கள் தேவனிடம் உயருகின்றன. அவருடைய கிருபைகளும் ஆசீர்வாதங்களும் காலை பனியைப்போல விண்ணப்பக்காரர்மேல் இறங்குகிறது. (40)

மிக ஒழுங்கான கிறிஸ்தவ இல்லம் கிறிஸ்தவ மதத்தின் உண்மைக்கு வல்லமையான—தேவபக்தியற்றவர்கள் மறுதலிக்கமுடியாத வாதமாகும். பிள்ளைகளை பாதிக்கிற ஒரு செல்வாக்கு குடும்பத்திலே செயல்படுவதையும், ஆபிரகாமின் தேவன் அவர்களோடு இருக்கிறதையும் அனைவரும் காணமுடியும். கிறிஸ்தவர்களென்று அழைத்துக்கொள்ளுபவர்களின் இல்லங்கள் சரியான அமைப்பில் இருக்குமானால், அவர்கள் நன்மைக்காக

மிக வல்லமையான செல்வாக்கை ஏற்படுத்தமுடியும். அவர்கள் மெய்யாகவே "உலகத்திற்கு வெளிச்சமாக" இருப்பார்கள். "கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்" என்ற வார்த்தைகளால் பரலோகத்தின் தேவன் விசுவாசமான ஒவ்வொரு பெற்றோரிடமும் பேசுகிறார். ★ (41)